Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 8 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 17 (24-10-64) சனிக்கிழமை இதழ் 255



30 வருட நற்சேவையினுல் மக்களின்
அமோக ஆதரவை பெற்றவர்
எம். எஸ். எம். ஜூனைட்
( மூக்குக்கண்ணுடி தயாரிப்பாளர் )
144, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

# குருஷேசேவ் வீட்டுக் காவலிலில்லை

## பத்திரிகை செய்திகள் ஆதாரமற்றவை என்கிருர் கெனமன்

கொழும்பு, வெள்ளி

முன்னுள் ரஷ்யப் பிரதமர் திரு. நிக்கிட்டா குருஷ்சேவ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிருர் என்பது முற்றிலும் பொய் என்றும் எதேச்சாதிகார பத்திரிகைகளின் செய்தி திரிப்பில் இதுவும் ஒன்று எனவும் ரஷ்யாவில் நிர்வாக மாற்றம் நடைபெற்றபோது அங்கிருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. பீட்டர்கெனமன் இன்று இங்கு தெரிவித்தார்.

சமீபத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற நிர்வாக மாற்றங்களினுல் அதன் சர்வதேச கொள்கைகளின் அடிப்படையிலோ, நிர்வாக நிலைமையிலோ மாற்றம் எதுவும் ஏற்படாதெனவும் திரு. கெனமன் இங்கு தெரிவித்தார்.

திரு. குருஷ்சேவ் தனது சொந்த விருப்பத்தின் பெயரில் பதவியிலிருந்து விலகமனுச் செய்தார் எனவும், அவர் சமூகமளித்திருந்த கூட்டத்திலேயே அவரது ராஜினமா ஏற்றுக் கொள்ளப்பட்டது எனவும் திரு. கெனமன் மேலும் தெரிவித்தார்.

தான் ரஷ்யாவிலிருந்த சமயம் இந்த மாற்றங்களைப் பற்றி ரஷ்ய கம்யூனிஷ்ட்கட்சி பிரமுகர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதாக கெனமன் தெரிவித்தார். இந்த மாற்றங்கள் பற்றி வெளிநாட்டு பத்திரிகைகள், ஆதாரமற்ற தப்பான செய்திகளை வெளியிட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னைய அடிப்படைக் கொள்கைகளையே ரஷ்ய நிர்வாகம் பின்பற்றும் எனவும், சமாதான சகவாழ்வு, ஆயுத பரிகரணம், தேசிய விடுதலைக்கு ஆதரவு போன்றவற்றில் மாற்றம் எதுவும் இல்லையென்றும், குருஷ்சேவ் ஆதரவாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது ஆதாரமற்றதெனவும் அவர் தெரிவித்தார்.

பரந்தன்

## தொழிலாளர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

பரந்தன், வெள்ளி

எட்டு நாட்களாக நடைபெற்ற பரந்தன் ரசாயன தொழிற்சாலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நேற்று கைவிடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நேற்று தொழிலாளர்கள வேலைக்குத் திரும்பினர்.

கைத்தொழிலமைச்சர் காரியாலயத்தில், கைத்தொழிலமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்க, பரந்தன் கூட்டு ஸ்தாபனத் தலைவர் கை அமிர்தநாயகம், தொழிற்சங்கத் தலைவர்களான என். ராமநாதன், சி. எச். எஸ். நாதன், செல்வரத்தினம் ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்தே இந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. பேச்சு வார்த்தைகளில் செய்து கொள்ளப்பட்ட சில முடிவுகள் வருமாறு:

'கன்ரீன்' நிர்வாகத்தை தொழிலாளர் கூட்டுக் கமிட்டியிடம் ஒப்படைத்து இப்போதுள்ள நிர்வாகியை விலக்குவது. நிரந்தரமற்ற தொழிலாளர்களை வேலைக்குத் திருப்பி எடுப்பது. சகல நாளாந்த மாதாந்த தொழிலாளருக்கான சம்பளப்பட்டியலை, மற்றும் கூட்டுஸ்தாபனங்களைப்போல சமமான முறையில் அமுல் செய்ய முயற்சியெடுப்பது

இம்மாதம் 30-ம் திகதி கைத்தொழில் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா தொழிற்சாலைக்கு விஜயம் செய்யும்போது, ஒரு மகஜர் சமர்ப்பிக்க தொழிற்சங்கங்கள் முடிவுசெய்துள்ளன.

## ஏழு பொலிஸ் உத்தியோகத்தர் தற்காலிக வேலைநீக்கம்

மாவிட்டபுரம், வெள்ளி

வல்வெட்டித்துறையில்சுமார் 5 மாதங்களுக்கு முன் வல்வெட்டித்துறை பொலிசாரால் ஒருவர் தாக்கப்பட்டது சம்பந்தமாக பொலிஸ் பகுதியினர் விசாரணை நடத்தி வருகிருர்கள். இது சம்பந்தமாக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டனின் அதிகாரத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உட்பட ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்றுமுதல் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

சென்ற மே மாதம் 29-ம் திகதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இ. தம்பிராசா என்பவரின் மனைவியை அவரிடமிருந்து பலாக்காரமாகப் பிரித்ததாகவும், தம்பிராசாவைத் தாக்கி அவர் மேல் பலாத்காரம் பிரயோகித்ததாகவும் இந்த ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேல் புகார் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்கள் இச்சம்பவத்தின் பின் வல்வெட்டித்துறையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள்.

சுப்பிரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தவருன தகவலைக் கொடுத்ததாக சுப்பிரீம் கோர்ட், தம்பிராசாவுக்கு சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

இப்போது பொலிஸ் பகுதியினர் இலாகாவிற்குட்பட்ட விசாரணை நடத்துவதற்காக இவர்களை தற்காலிக பதவி நீக்கம் செய்துள்ளனர்.

---

## ஹுக்கும்சிங்

மேற்கு பெர்லின், அக். 22

இந்திய சபாநாயகர் திரு. ஹுக்கும்சிங் தலைமையில் ஐரோப்பா சென்றுள்ள பாராளுமன்ற தூதுகோஷ்டி நேற்று மேற்கு பெர்லினிக்கு விஜயம் செய்தது.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:
16 Z 0074 ரூபா 24,860

இரண்டாவது பரிசு:
17 R 0068 ரூபா 7,000

மூன்ருவது பரிசு:
03 U 0088 ரூபா 3,500

(5-ம் பக்கம் பார்க்க)

## டபிள்டெக்கர்கள் வந்தன

யாழ்ப்பாணம், சனி

நான்கு டபிள் டெக்கர் பஸ்கள் சென்ற வியாழக்கிழமை இரவு இங்கு வந்துசேர்ந்தன இவற்றில் மூன்று பஸ்களில் எஸ்.யூ வி. இலக்கத்தொடரும் ஒன்றில் எல். வை. இலக்கத் தொடரும் இருக்கின்றன. இலண்டனில் பொறிக்கப்பட்ட இந்த இலக்கங்கள் 6 மாத காலத்தின்பினரே மாற்றப்படும்எனத்தெரியவருகிறது.லண்டனில் ஓடிய இந்த பஸ்களில் நவீனவசதிகள் இருக்கின்றன.

இந்த நான்கு பஸ்களும் சேவையில் அமர்த்தும் பொருட்டு நேற்று நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவை கீரிமலை, பலாலி, கொடிகாமம் கச்சேரி ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிய வருகிறது.

---

## டயர் தொழிற்சாலை துரிதமாக அமைக்கப்படுகிறது

கொழும்பு, வெள்ளி

களனியில் நிறுவப்பட்டுவரும் டயர் கூட்டு ஸ்தாபனத் தொழிற்சாலைக்கான வேலைகள் துரிதமாக நடந்துகொண்டு வருகிறது. டயர்களை உற்பத்தி செய்வதற்காக உருவாகி வரும் இத் தொழிற்சாலைக்கான சகல யந்திரங்களையும் இலங்கைக்கு சோவியத்ரஷ்யா அளித்துள்ளது.

## கொக்கலைக்கு விமானசேவை

கொழும்பு, வெள்ளி

ஏயர் சிலோன் விமானக் கம்பனியார் கொக்கலைக்கு விமானசேவையை ஆரம்பிக்க இருக்கிருர்கள். இச் சேவை இரண்டு வார காலத்துக்கு தொடர்ந்து இருக்கும். சேவை திருப்திகரமாக இருந்தால் கொக்கலைக்கு விமானசேவை தொடர்ந்து இருக்குமென அறியப்படுகிறது.

---

## பெற்ருேர் ஆட்சேபம்

கொழும்பு, வியாழன்

பெற்ருேர்களின் வீடுகளுக்கு அண்மையிலிருக்கும் பள்ளிக்கூடங்களுக்குத்தான் தங்கள் பிள்ளைகள் கட்டாயமாகச் செல்ல வேண்டுமென்ற நிபந்தனையையிட்டு சில பெற்ருேர்கள் கல்வி இலாகாவிற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

அநேகமான அண்மையில் உள்ள பள்ளிக்கூடங்களில் வேண்டிய சகல வசதிகள் இல்லையென்றும், ஆகவே இந்த நிபந்தனையை பிள்ளைகள்மேல் திணித்தால் பெற்ருேர்கள் கோர்ட்டிற்குச் சென்று இதையிட்டு வாதாடுவார்களென்றும் கல்வி இலாகாவிற்கு பெற்ருேர்கள் தெரிவித்துள்ளனர்.



சகாய விற்பனை
எல்லா வகையான
சேட் வகைகளும்
மற்றும்
புடவைத் தினிசுகளும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
விக்னேஸ்வரா
புடவை மாளிகை
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
தரமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

மணிவாக்கு

மக்கள் தம்மைத்தாமே கொன்று ஒழித்துக்கொள்ளாமற் காப்பது சுதந்திர மனிதர் யாவருக்கும் உள்ள முதற் கடமை. அவர்களுடைய தலைவர்களுக்கும் அதுவே முதன்மையான கடமையாகும்.

— ஐஸனேவர்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி ௴ 8 உ. (24-10-64)

## ஐ. நா. ஸ்தாபனம்

சோதனைகள் நிறைந்த சமயத்தில் ஐ. நா. ஸ்தாபனம் தனது வாலிபப் பிராயமான இருபதாவது வயதில் இன்று காலடி எடுத்து வைக்கிறது. கடந்த காலத்தைப் போன்று சோதனைகளில் வெற்றியீட்டி உலக அமைதிக்கு தொடர்ந்து அது வழிகாட்டுமென எதிர்பார்க்கிறேம்.

குழந்தைகளின் நலனுக்கும் கல்வி, விஞ்ஞான, சமூக, கலாசார வளர்ச்சிக்கும், மனித உரிமைக்கும், உலகசமாதானத்துக்கும் சேவை புரிவதையே நோக்கமாகக்கொண்ட இந்த உலகஸ்தாபனம் தனக்கும் உலக அமைதிக்கும் தோன்றிய பல நெருக்கடியான கட்டங்களை வெற்றிகரமாகச் சமாளித்து முன்னேறி வந்துள்ளது.

சண்டையிட்டுச் சாவதைவிட சமாதானமாக வாழ்வது கடினம். இந்தக் கடினமான காரியத்தைச் செய்வதில் ஐ. நா. ஸ்தாபனம் உழைத்து வருகிறது. என்றாலும் உலகில் பலாத்காரச் சண்டைகள் இன்னும் ஒழிந்துவிடவில்லை, பயங்கரமான வறுமையும் அறியாமையும் இன்னும் நீடிக்கவே செய்கின்றன. சீன-இந்திய எல்லைச் சண்டையோ, இந்தோனேஷிய-மலேஷிய தகராறோ இன்னும் தீரவில்லை. சைப்ரஸ் பிரச்னை நீங்கவில்லை, தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கொள்கை இன்னும் நீடிக்கத்தான் செய்கிறது. காலனி ஆதிக்கமும், புதிய காலனி ஆதிக்கமும் நீங்கவில்லை. படைக்குறைப்பு ஏற்படவில்லை. அணு ஆயுத உற்பத்தியும் அணுக்கதிர் விளைவுகளும் முற்றாக ஓயவில்லை. வல்லரசுகளின் அணு ஆயுத உற்பத்தியும்சோதனைப் பீதியும் மாஸ்கோவில் கையெழுத்தான ஓரளவு அணுஆயுதத்தடை ஒப்பந்தத்தினுல் சிறிது குறைந்திருந்த போதிலும் சில தினங்களுக்கு முன் சீனு அணு ஆயுதமொன்றை வெடித்துப் பரீட்சித்ததும் சீனுவும் பிரான்சும் 'ஓரளவு அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தில்' கைச்சாத்திட மறுத்து வருவதும் அணுஆயுத பீதியையும் யுத்த ஆபத்தையும் மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. இதே சமயம் உலக சமாதானத்துக்காக உழைத்த திரு. ஜவஹர்லால்நேருவும், திரு. ஜோன் எப். கென்னடியும் இவ்வுலக வாழ்வை நீத்ததும் திரு குருஷ்சேவ் பதவி இழந்துள்

# இன்று ஐ. நா. தினம்

## நெருக்கடிகளைக் குறைத்து உலக சமாதானத்துக்குப் பாடுபடும் ஸ்தாபனம்

**இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தினமாகும். 19 ஆண்டுகளை கழித்துவிட்டு 20-வது வயதை அடையும் இந்த ஸ்தாபனம், கடந்த காலத்தில் பல நெருக்கடிகளை வெற்றிகரமாகச் சமாளித்திருக்கிறது. ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட், இந்த ஸ்தாபனத்தின் இலட்சியங்களை இங்கு மீண்டும் வலியுறுத்துகிருர்.**

"யுத்தத்தின் அகோரப் பிடியிலிருந்து வருங்கால சந்ததிகளை காப்பாற்ற நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்" என்று ஐக்கிய நாடுகளின் சாஸனத்தின் மூல பிதாக்கள் பத்தொன்பது ஆண்டுகளின் முன் எடுத்துக் கூறினர்கள்.

அன்று அவர்கள் இதைப் பிரகடனம் செய்தபொழுது, இவ்வார்த்தைகள் சொல்லலங்காரமாக முடியாமல், பெறுமதி உடையனவாக விளங்க வேண்டுமானல் இந்தப் புதிய உலக ஸ்தாபனம் முந்திய சர்வதேச ஐக்கிய ஸ்தாபனத்தைப் போலன்றி அடியோடு திருந்திய அடிப்படையில், அமைய வேண்டுமென்று அவர்கள் உறுதியாக உணர்ந்து கொண்டார்கள். முதலாவதாக சகல மனிதரும், சகல தேசங்களும் அவற்ருேடு சம்பந்தப் பட்டிருப்பதை அவர்கள் உணர்ந்து மதித்தார்கள். இதன் பலனாகவேதான் உலக தேசங்களில் அநேக நாடுகள், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்றன. கடந்த 19 ஆண்டுகளாக எவ்வளவோ காரியங்களை ஐ. நா. நிறைவேற்றியிருப்பினும், இன்னும் எவ்வளவோ நிறைவேற வேண்டியிருக்கின்றது என்று சிலர் வாதாடலாம். இதிலும் உண்மை இருக்கிறது. உலகில் பலாத்காரச் சண்டைகள் இன்னும் தான் நிலவுகின்றன. பயங்கரமான வறுமை இன்னும்தான் நீடிக்கிறது. இவற்றையும் மறுக்க முடியாது. ஆனல், ஐ. நா. சாஸனத்தில் இடம் பெற்றுள்ள இலட்சியங்கள், சான் பிரான்சிஸ் கோவில் உருப்பெற்ற போது இருந்ததைப் போலவே இன்னும் பல அம்சங்களில் அவை புதியனவாகவும், பயன் பெறக் கூடியனதாகவும் நிலவுகின்றன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இன்று தனது இருபதாவது வயதை ஆரம்பிக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும், இந்த லட்சியத்தை அடைவதற்கு மனிதனுக்கு இதுவரை கிடைத்த தலைசிறந்த பயன் தரும் கருவியாக, அது பிறந்த சமயத்தில் எப்படித் திகழ்ந்ததோ அப்படியே தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. மேலும் திகழும் என்பது அசைக்க முடியாத உண்மை.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின இலட்சியங்கள் நிறைவேறுவதற்கு அதன் உறுப்பு நாடுகள், ஐ. நா. சாஸனத்தை மதித்து நடக்கவேண்டும். சமாதானமே ஐ. நா.வின் ஒரே கொள்கை. ஒரே மூச்சு என்பதை சகல உறுப்புநாடுகளும் நன்குணரவேண்டும். இன்று ஐ. நா.வின் 20-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் உலகநாடுகள், ஐ. நா.சாஸனத்துக்கு மதிப்புக் கொடுத்து அதன் இலட்சியங்களை நிறைவேற்ற தங்களால் இயன்ற பங்கை எடுத்துக்கொள்வதே உலகுக்கு அந்த நாடுகள் ஆற்றும் பெரும் பணியாகும்.

ஏதும் ஐ. நா.வின் துரதிருஷ்டமேயாகும். என்றாலும் ஐ. நா. தனது சமாதானப் பணியையும் இதர கடமைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்ற உலக நாடுகளின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். இந்த ஒத்துழைப்பும் ஆதரவும் எதிர்காலத்தில் அமோகமாகக் கிடைக்குமென்றே எதிர்பார்க்கலாம். ஏனெனில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் தமது செய்தியில் கூறுவதுபோல் "ஐ. நா. இல்லாத உலகம் இனி சாத்தியமில்லை" என்பது உண்மையே.

உலக அமைதியைப் பேணுவதில் ஐ. நா. ஸ்தாபனத்துக்குள்ள முக்கிய பணிகளில் ஒன்று, 60 கோடி மக்களைக் கொண்டதும், புதிய அணுவல்லரசாக உருவெடுத்துள்ளதுமான நவசீனவைத் தனது அங்கத்துவ நாடாகச் சேர்த்துக்கொள்ளவேண்டியது. இனியும் சீனவைப் புறக்கணிப்பது உலக அமைதிக்கு நிச்சயம் நன்மையளிக்காது. ஐ. நா.வில் சீன அங்கத்துவம் பெறுவதற்கு முக்கிய தடையாக விளங்கும் அமெரிக்கா இனியாவது உண்மை நிலையை உணர்ந்து காலத்துக்கேற்பத் தனது போக்கை மாற்றியே ஆகவேண்டும்.

மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தாலே நாட்டிலும், உலகிலும் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவமுடியும். இன்று சிறிய நாடாயினும் சரி, பெரியநாடாயினும் சரி ஒவ்வொரு நாடும் பல பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளன. அந்நிய ஆட்சியிலிருந்து சமீபத்தில் விடுதலையடைந்த நாடுகளிலேயே பல பிரச்னைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. மொழி, மதம் முதலியவைகள் இப்பிரச்னைகளில் சில. இவை உள்நாட்டுப் பிரச்னைகள் என்று இனியும் அவற்றில் கருத்துச் செலுத்தாதுவிடுவது உலக அமைதிக்குப் பூரண வெற்றி அளிக்கமுடியாது. நாடுகளில் உள்ள பிரச்னைகளில் ஐ. நா. ஸ்தாபனம் நேரடியாகத் தலையிடாவிட்டாலும், தங்கள் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்ற மக்கள் தங்களுக்குள்ளேயே பூசலையும், பிரச்னையையும் வளர்த்து உலக அமைதிக்கு இடையூருக இருப்பதைப் பிரிட்டன் போன்ற வல்லரசுகள், ராஜாஜி கூறுவதுபோல் ஐ. நா. மூலம் பெற முயற்சிசெய்து உலக மக்கள் அனைவரும் உரிமையுடன் சந்தோஷமாக வாழ வழிசெய்யலாம்.

## "ஐ. நா. இல்லாத உலகம் சாத்தியமில்லை"

### பிரதம காரியதரிசி யுதாண்ட் செய்தி

ஐ. நா. தினம் சம்பந்தமாக ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் விடுத்த செய்தி:

பல வருட காலமாக ஐக்கிய நாடுகள் தினத்தை நாம் கொண்டாடிவருகின்றோம். ஐக்கிய நாடுகள் தினத்தை நாம் வருடாவருடம் கொண்டாடுவது ஒரு மகிழ்ச்சிக்காகவோ அல்லது ஒரு நாள் விழாவை நடத்துவதற்காகவோ மட்டும் அல்ல. ஐக்கிய நாடுகளின் இலட்சியங்களை மீண்டும் நினைவு படுத்திக்கொள்ளவும் அது கொண்டுள்ள இலட்சியங்களுக்கா எங்களை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளவுமே நாம் இந்தத்தினத்தை நினைவு கூருகின்ரேம். ஐக்கிய நாடுகள் எதனைச் சாதித்திருக்கிறது என்பதை நாம் மீண்டும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதனுடன், எம்மை எதிர்நோக்கியுள்ள பல நெருக்கடிகளையும் சமாதானமாகத்தீர்க்க வேண்டும். என்ற முழு நம்பிக்கையுடன் நாம் முன்னேக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் உதயமான கடந்த பத்தொன்பது வருட காலத்துக்குள், எமது சமூகத்தில் பல அத்தியாவசியமான காரியங்களை ஐக்கிய நாடுகள் செய்துள்ளது என்பது நிருபணமாகிவிட்ட ஒரு உண்மையாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினுல் ஏற்பட்டுள்ள நன்மைகள் குறித்தும் சில தவறுகள் குறித்தும் கருத்துக்கள் மாறுபடுவது இயற்கைதான். ஆனல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிலைநாட்டியுள்ள சாதனைகளையும் உலக சமாதானத்துக்கு அது ஆற்றியுள்ள பெரும் சேவையையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஐக்கிய நாடுகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## "கடந்தகால சாதனைகள் எமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது"

### பொதுச்சபைத் தலைவர் கருத்து

ஐக்கிய நாடுகளின் ஆண்டு விழாவில்நான் இன்று இரண்டாவது முறையாக உலகமக்களுடன் கலந்து கொள்கிறேன். சென்ற ஆண்டின் போது உலகசமாதானத்தையும் பரஸ்பரநம்பிக்கையையும் நிலைநாட்ட பலவிதமான அனுபவத்தினூடாக ஆவல் கொண்டிருந்தோம்" என்று ஐக்கிய நாடுகளின் 19-ம் ஆண்டுவிழாவைக் குறித்து விடுத்த செய்தியொன்றில் ஐக்கிய நாடுகளின் தலைவர் திரு. காலொஸ்சொஸ ரேட்றிக்காஸ் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்த செய்தியில் மேலும் கூறியதாவது: "உலகத்தில் எல்லா நாடுகளும் இந்த ஐக்கியநாடுகளின் சபைமூலமாகத்தான் ஒற்றுமையைக் காண முடியும். பலதரப்பட்ட பிரச்னைகளுக்கும் சுமுகமாகத் தீர்வு காண்பதையும், கோரசம்பவங்களும் ஆபத்துகளும் நிகழாவண்ணம் தடுப்பதையும் இதன்மூலமே சாதிக்கலாம். ஆகவே இப்படியான பல உலக மக்களையும் ஒன்றுபடுத்தும் ஒரு ஸ்தாபனம் இன்றியமையாதது என்பதை பல நாடுகளும் உணருகின்றன. சென்ற ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளை எண்ணும்போது நாம் சகல விஷயங்களையும் வருங்காலத்தில் பொதுச்சபையில் அலச வேண்டுமென்ற கருத்து உதயமாகின்றது. இந்தச்சபையின் 19 வருடச் சேவையும் இன்றும் இச்சபை இயங்கிக்கொண்டிருக்கும் நிலையும்வருங்காலத்திலும் நாங்கள் செயலாற்றலாம் என்பதற்கு எனக்கு உறுதியளித்துள்ளது.

இந்த நல்லெண்ணத்திலும் நம்பிக்கையிலும் உலகத்தின் சரித்திர, கலாச்சாரத்தில் நாம் ஒரு தன்னிகரற்ற வெற்றியை உண்டாக்கலாம் என்று நான் பூரணமாக நம்புகிறேன். இந்த விழாவைக் கொண்டாடும் பொழுது நான் ஐக்கிய நாடுகளின் சபைத் தலைவர் என்ற கோதாவில் எனது நல்ல ஆசிகளை எல்லா நாடுகளுக்கும் மற்றும் எங்கள் சபையின் அங்கத்துவ நாடுகளின் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்."

## ஐயாறன் எழுதுவது

சென்றவாரக் கடைசியில் திருக்கேதீச்சரம் சென்றிருந்தேன். மூன்று நாட்களாகப் பேப்பரே படிக்கவில்லை. மனதுக்கு நிம்மதி. பத்திரிகை படிக்காதவர்கள் பாக்கியசாலிகள் என்று ஒரு பெரியவர் கூறியதின் உண்மையை உணர முடிந்தது.

ஆனல் அங்கிருந்து திரும்பி பேப்பரைப் படித்ததும், அந்த மூன்று நாட்களிலும் உலகிலே எவ்வளவு பெரிய பெரிய காரியங்கள் ஏற்பட்டுள்ளன! ரஷ்யாவிலே பிரதமர் குருஷ்சேவும் அவரைச் சேர்ந்தவர்களும் அரோகரா! பிரிட்டனிலே கன்சர்வேடிவ் கட்சி தோற்று, தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வந்துள்ளது. சீனம் அணுகுண்டு வெடித்து "பெரியார்" ஆகிவிட்டது! உலக அரங்கத்தில் தான் சென்ற வாரம் எவ்வளவு பெரிய மாறுதல்கள்! இன்னும் என்னென்ன ஏற்படுமோ யார் கண்டார்கள்! நாடகமே உலகம் நாளை நடப்பதை யார் அறிவார்?

* * *

இவை எல்லாவற்றையும்விட மீரிகமையிலே தலைமன்னர் ரயில் கவிழ்ந்ததைப் பற்றித்தான் எங்கும் பேச்சாக இருக்கிறது. சனிக்கிழமை காலை அந்த விபத்து நடந்தது. மறுநாள் மாலை அதே வழியாக ரயிலில் வந்தேன். அவ்வண்டியிலே யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு இளம் பெண்மணியும் வந்தார். முகத்தில் மகிழ்ச்சியில்லை. அவருக்கு சென்ற மாதம்தான் விவாகமானதாம், இராணுவத்தில் வேலைபார்க்கும் அவரது கணவனர் அந்த விபத்தில் சிக்கிக் காயம்பட்டதாயும், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாயும் தந்தி கிடைத்ததும், ஓர் ஆண் துணையுடன் அப்பெண் புறப்பட்டுகொழும்புக்குவருவதாயும் அறிய மிக வருத்தமாக இருந்தது. பின்னர் விசாரித்ததில் ஆஸ்பத்திரியிலே அந்தப் புது மாப்பிள்ளை குணமடைந்துவருவதாகத் தெரிந்தது. இந்தப் பெரிய கண்டத்தில் எமனுக்குத் தம் கணவனர் தப்பிவிட்டதை அறிய அப்பெண்மணிக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும்!

* * *

விபத்து ஏற்பட்ட இடத்தில் எங்கள் ரயில் மெதுவாக வந்துகொண்டிருந்தது. மழையும் தூறியது. கீழே எல்லாம் சேறும் சகதியும். பாதைக்கு இரு புறமும் சக்குநூருன ரயில் பெட்டிகள் அலங்கோலமாகக் கிடந்தன. எங்கும் ஒரே துர்நாற்றம். இன்னும் பெட்டிகளில் சிக்கியுள்ள பிரேதங்களின் நாற்றமென்ருர் ஒருவர். இல்லை அது அழுகிய மீன்களின் நாற்றமென்ருர் மற்ரெருவர். அழுகைக்குரல்கள் கேட்டன. பொலிசார் காவல் புரிந்துவருகிருர்கள். மட்டக்களப்பிலிருந்து தம் தாயின் அந்தியேட்டிக்காக வந்த ஒரு ரயில்வே கார்டு, விபத்தில் சிக்கி மாண்டார். அவரது உடலை எடுத்துச் செல்ல ஒரு லொறி பக்கத்தில் காத்திருந்தது.

விபத்து நடந்த இடத்துக்கு ஏராளமான மக்கள் வந்து பார்த்துவிட்டு இதன் காரணத்தைப்பற்றி பலரும் பலவிதமாகக் கதைத்தனர். அந்த இடத்தில் பாதை சரியில்லை என்றும் அதனல் விபத்து ஏற்பட்டிருக்கலாமென்ருர் ஒருவர். இந்த அரசாங்கத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்தவே சிலர் அரசியல் நோக்கத்துடன் இதைச் செய்திருக்கலாமென்ருர் மற்ரெருவர். வாழ்வு கெட்ட ஒருவர் நடத்தும் ஆட்சியிலே இவ்விதமெல்லாம் நடக்கும்தானே என்ருர் வேருெருவர். ஒரு ரயில்வே அதிகாரியை விசாரித்தேன். தாம் ஒன்றும் கூறுவதற்கில்லை

(5-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை இந்திய பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கும் என பிரதமர்கள் நம்பிக்கை



## விருந்துபசாரக்கூட்டத்தில்சாஸ்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா பேச்சு

### இரு நாடுகளின் பாரம்பரிய நட்புறவு பற்றி இரு பிரதமர்களும் பிரஸ்தாபம்



புதுடில்லி, அக். 23

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண இயலும் என இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும், இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரியும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். நேற்றிரவு திரு. சாஸ்திரி இலங்கைப் பிரதமருக்கு அளித்த விருந்தில் பேசுகையிலேயே அவர்கள் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்த விருந்தில் இந்தியப் பிரதமமந்திரி மேலும் பேசியபோது அணு ஆயுதங்களைக் கொண்டிராத ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து அணுஆயுதங்களுக்கு விரோதமான மக்கள் கருத்தைத் திரட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இவ்விஷயத்தில் உலக மக்களின் கருத்து அணுஆயுத நாடுகள்மீது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புவதாயும் அவர் கூறினார்.

"சீன வெடித்த அணுக்குண்டு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபற்றி அனைவருக்கும் கவலை ஏற்பட்டிருக்கிறது. அணு ஆயுதங்களை உடன்பாட்டின் மூலம் தடைசெய்ய வேண்டும் என்பதே இந்தியாவின் கருத்து" என்றும் சாஸ்திரி கூறினார்.

**இலங்கை–இந்திய நட்புறவு**

"இலங்கை இந்திய நட்புறவை நமது இருநாடுகளும் போற்றிவருகின்றன. வருங்காலத்தில் மேலும் இந்தஉறவு பலமடையும் என நம்புகிறேன். பரஸ்பரம் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று எப்போதும் உதவியாய் இருந்துவரும். இரு நாடுகளும் இலங்கை இந்தியர் பற்றி சுமுகமான தீர்வு ஏற்படும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றன. அண்டை நாடுகளுக்கிடையே பிரச்னைகள் எழுவது இயல்பு. ஆனால் அது நட்பு முறையில் தீர்க்கப்படும். எனக்கும் திருமதி பண்டாரநாயக்காவுக்குமிடையே கொள்கை அளவில் உடன்பாடு ஏற்படுமானல் மேற்கொண்டு விபரங்களை விரைவாக வரைந்துவிடலாம் என்றும் சாஸ்திரி குறிப்பிட்டார்.

ஐ. நாவிலும், இதர உலக மகாநாடுகளிலும் இலங்கையும் இந்தியாவும் ஒன்றாக ஒத்துழைத்து வருகின்றன. கெய்ரோவில் இலங்கைப் பிரதமரைச் சந்தித்தபோது எங்கள் இருவருக்குமிடையே பல விஷயங்களில் பொது உடன்பாடு இருந்தது" என்றும் திரு. சாஸ்திரி குறிப்பிட்டார்.

**இலங்கைப் பிரதமர்**

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இதற்குப் பதிலளித்துப் பேசியபோது இந்தியாவுக்கு தான் எப்போது வந்தாலும் நல்லமுறையில் வரவேற்கப்படுவதாகக் கூறினார். இலங்கை-இந்தியர் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுமுகமாகவே தாம் முக்கியமாக இப்போது டில்லி வந்திருப்பதாயும் அவர் கூறினார்.

"இப்பிரச்னை கடந்த 25 ஆண்டுகளாகவே நம்மிரு நாடுகளின் மனதிலும் இடம்பெற்று வருகிறது. பிரச்னையை நல்லுறவு, நட்புறவு அடிப்படையில் அணுகினல் தீர்வு காண்பது சாத்தியமே" என்றும் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா கூறினார்.

**நட்புறவு குலையாது**

"இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவு எப்படியிருந்தபோதிலும் இருநாடுகளுக்குமிடையே பாரம்பரிய நட்புறவு தொடர்ந்து இருக்கும் என உறுதி கூறுகிறேன். நம்மிரு நாடுகளுக்கும் வரலாறு, மரபு, கலாச்சாரம் பொதுவானது. இதை ஒருபோதும் பாதிக்க விடமாட்டோம்" என்றும் இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டார்.

**ஆசியா ஏழையாகிவிட்டது**

"நேருஜியின் மறைவினல் பாரதம் தனது மாபெரும் புதல்வர்களில் ஒருவரை இழந்துவிட்டது. நம் காலத்தின் வரலாற்றில் அவரது சொல்லும் செயலும் உலகில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அவரது மறைவினல் ஆசியமக்கள் ஏழைகளாகிவிட்டார்கள்" என்றும் இலங்கைப் பிரதமர் தொடர்ந்து கூறினார்.

ஸ்ரீமதி பண்டாரநாயக்கா நேற்று காந்திஜியின் சமாதியான சாந்திபவனத்துக்கும் சென்று வந்தார். பின் திரு. பீலிக்ஸ், திரு. இலங்கரத்ன ஆகியோருடன் சென்று ஜனாதிபதி ராதாகிருஷ்ணனையும் சந்தித்தார்.

**பேச்சு வெற்றிபெறும்**

இந்த முறை இலங்கை-இந்திய பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்வுக்கு வரும் என புதுடில்லி வட்டாரங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகள் திரு. சுவர்ண்சிங் இலங்கை வந்திருந்தபோது பூர்த்தியாக்கப்பட்டன என்றும், பேச்சு வெற்றிகரமாக முடியும் சாத்தியம் இருக்கிறதெனப் பொதுவாக இங்கு கருதப்படுகிறது.

---

## குவாஜா நாஜிமுதீன் டாக்காவில் காலமானர்

### முன்னுள் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலும், பிரதம மந்திரியும்:

டாக்கா, அக். 23

முன்னுள் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலாகவும், பிரதம மந்திரியாகவுமிருந்த குவாஜா நாஜிமுதீன் நேற்று டாக்காவில் காலமானர். அவருக்கு வயது 70.

பாகிஸ்தான் ஸ்தாபகர் ஜின்னு காலமானபின் 1948-ம் ஆண்டு நாஜிமுதீன் கவர்னர் ஜெனரலானர். 1951 முதல் இரண்டு ஆண்டுகள் அவர் பாகிஸ்தான் பிரதம மந்திரியாகவும் இருந்தார். வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்படுமுன் அந்த ராஜ்யத்தின் முதன்மந்திரியாகவும் நாஜிமுதீன் பதவிவகித்தார்.

நாஜிமுதீனின் மரணத்தைவிட்டுப பாகிஸ்தானில் எல்லா அரசாங்கக் கட்டிடங்களிலும் கொடிகள் அரைக்ம்கபத்தில் பறக்க விடப்பட்டிருக்கின்றன. கிழக்குப் பாகிஸ்தானில் எல்லா அரசாங்க அலுவலகங்களும் மூடப்பட்டிருக்கின்றன.

மிஸ் பாத்திமா ஜின்னு, பாகிஸ்தான் சபாநாயகர், மேற்கு வங்காள கவர்னர், மத்திய மந்திரிகள் ஆகியோர் அவரது மறைவுபற்றி அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர். மேற்குப் பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கூட்டாக ஓர் அனுதாபக் கூட்டம் நடத்தின.

திரு. குவாஜாநாஜி முதீன், ஜனதிபதி பதவிக்குப் போட்டியிடும் மிஸ் ஜின்னுவுக்குப் பேராதரவாய் இருந்தவர்.

---

## அராபிய நாடுகளுடன் உறவை வளர்க்க பிரிட்டன் ஆவல்

### பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி வாக்கர் அமெரிக்க விஜயம்

லண்டன், அக். 23

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. கோர்டன் வாக்கர் வருகிற ஞாயிற்றுக்கிழமை வாஷிங்டனுக்கு விஜயம்செய்யவிருக்கிறர். ஜனதிபதி ஜோன்ஸன், வெளிநாட்டு மந்திரி ரஸ்க் ஆகியோரை அவர்கள் சந்தித்துப் பேசுவார்.

திரு. வாக்கர் நேற்று நிருபர்களிடம் பேசியபோது அமெரிக்க-பிரிட்டிஷ் உறவுகள் மிகவும் ஜீவாதாரமானவை என்ருர். அராபிய நாடுகளுடன் பிரிட்டன் நட்புறவை வளர்க்கப் பாடுபடும் என்றும் அவர் கூறினர்.

இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பிலிருந்து மலேஷியாவைப் பிரிட்டன் பாதுகாக்கும் என்றும் கோர்டன் வாக்கர் ஊர்ஜிதம் செய்தார். விரைவில் மேற்கு ஐரோப்பிய வெளிநாட்டு மந்திரிகளைச் சந்திக்க விரும்புவதாயும் அவர் கூறினர்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் தனது பதவிக்காலத்தின் முதலாண்டிலேயே உருக்குத் தொழிலைத் தேசியமாக்குமென அறிவித்திருக்கிறது. கம்யூனிஸ்டுகள் இதைத் தீவிரமாய் ஆதரித்திருக்கிருர்கள். இந்த நடவடிக்கையை முழுமூச்சுடன் எதிர்க்கப்போவதாய் லிபரல்கள் அறிவித்திருக்கிருர்கள்.

அதேசமயத்தில் பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியின் உயர்மட்டத்தில் பல பிரதான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கட்சியின் இரு உபதலைவர்கள் ராஜினமா செய்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சென்னை பிரதம நீதிபதி ராஜினமா

புதுடில்லி, அக். 23

பதவியிலிருந்து விலக விருப்பம் தெரிவித்துராஷ்டிரபதிக்கு சென்னை பிரதம நீதிபதி எஸ். ராமச்சந்திர ஐயர் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. பிரதம நீதிபதியின் வேண்டுகோளுக்கு அரசாங்கம் இசையும் என்றும் தெரிகிறது. திரு. ராமச்சந்திர ஐயர் வயது குறித்து ஒரு சர்ச்சை எழுந்தது.

---

## கிரிக்கட் ரசிகர்கள் ஆத்திரம்

கல்கத்தா, அக். 23

மழை காரணமாக கல்கத்தாவில் கிரிக்கட் விளையாட்டு கிடையாது என இறுதியாக அறிவிக்கப்பட்டதும் மைதானத்தில் கூடியிருந்த மக்கள் ஆத்திரமடைந்து காலரிகளுக்கு தீவைத்தனர். தீயணைக்கும் படையினர் உடனடியாகத் தீயை அணைத்துவிட்டனர்.

---

## சீன அணு சோதனைக்கு யுதாண்ட் கண்டனம்

### குருஷ்சேவ் அறிக்கைவிட அனுமதிக்குமாறும் யோசனை

நியூயோர்க், அக். 23

அணுகுண்டு சோதனையைச் சீன நடத்தியிருப்பது குறித்து ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் கண்டனமும், கவலையும் தெரிவித்தார். இது மிக வருந்தத்தக்கது என்றும் அவர் கூறினர்.

அணுஆயுதங்களை முற்ருகத் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை சீன உட்படச் சகல நாடுகளும் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினர்.

ரஷ்யாவின் புதிய தலைவர்களுக்கு அவர் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டார்.

திரு. குருஷ்சேவைப் பற்றிக் குறிப்பிடுகையில் சமாதான சகவாழ்வுக்கு விஸ்வாசமுடன் பாடுபட்டார் என்ருர்.

திரு. குருஷ்சேவ் தாம் ஏன் விலகவேண்டி வந்ததெனப் பகிரங்க அறிக்கைவிட அனுமதிக்கப்பட்டால் அது மிகவும் உபயோகமாக இருக்கும், வரவேற்கத்தக்கதாக இருக்குமென்றும் யுதாண்ட் யோசனை கூறினர். எனினும் இதுவிஷயமாகத் தாம் ரஷ்யத் தூதுகோஷ்டியிடம் உத்தியோக ரீதியில் எதுவும் கோரவில்லை என்ருர் யுதாண்ட்.

ஐ. நா. பொதுச்சபையை ஒத்திவைக்கும் விஷயத்தில் எல்லா நாடுகளின் கருத்தையும் தாம் அறியவிரும்புவதாய் யுதாண்ட் கூறினர்.

ஐ. நாவுக்கு ரஷ்யா செலுத்தவேண்டிய கடனை அது தொடர்ந்து மறுக்குமென்றே தாம் கருதுவதாயும், கூட்டத்தில் ரஷ்யாவின் வாக்குரிமையைப் பறிக்கும் தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவர இருப்பதாயும், இதைத் தவிர்க்கும் சாதத்தியம் எதையும் தாம் காணவில்லையென்றும் யுதாண்ட் குறிப்பிட்டார்.

---

**கிழவி கைது**

## ஜோன்ஸனை கொலை செய்வதாக கூறினராம்

போர்ட்வேர்த், அக். 23

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனைக் கொலைசெய்யப்போவதாக பயமுறுத்திய 61 வயதுக் கிழவியை பொலிசார் கைதுசெய்தனர். ஒரு கடைக்காரருடன் பேசிக் கொண்டிருக்கையில் அந்தக் கிழவி ஜோன்ஸன் உயிருக்கு அபாயம் விளைவிப்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததை இரகசியப் பொலிசார் கேட்டுக்கொண்டிருந்தனர். அதன்பிறகு கிழவி கைதுசெய்யப்பட்டார்.

---

## வில்சன்

லண்டன், அக். 23

வருகிற திங்கட்கிழமை பிரதம மந்திரி வில்சன் முக்கியமான பொருளாதார அறிக்கையொன்றை விடுப்பார் என அறிவிக்கப்பட்டது.

# "சங்கத்தின் சேவை"

மாவிட்டபுரம், வியாழன்

"இலங்கையின் சரித்திரத்திலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்சங்கம் இதுவாகும். முன்னாளில் முச்சங்கம் அமைத்து மொழி வளர்த்தது போல பின்னாளிலும் மதுரையிலும் கரந்தையிலும் சங்கங்கள் உருவாகி தமிழ்மொழியை வளர்த்து வருகின்றன. இலங்கையில் தமிழ் சங்கம் இல்லாததொரு குறையை யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்சங்கம் நிவர்த்தி செய்துவிட்டது. இதன் மூலமாக நல்ல பல இலக்கியங்களை வளர்த்து இலக்கிய கர்த்தாக்களையும் ஊக்குவித்து தமிழ் மொழியை வளர்க்க இச்சங்கம் முன்வந்தது தமிழ் வரலாற்றிலே முக்கிய அம்சமாகும்."

நல்லூரில் நடைபெற்ற இலங்கைத் தமிழ்ச்சங்க அங்குரார்ப்பண விழாவில் திரு. செ. து. தெட்சணமூர்த்தி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போசகர்கள்: முத்தமிழ்மணி சி. எல். எஸ். மணிபாகவதர், டாக்டர் நந்தி, புரக்டர் திரு எஸ். வி. க. லிங்கம், திரு. எஸ். செவநாயகம் தலைவர்: திரு. எஸ். ஜெகநாதன், இணைச் செயலாளர்கள்: செ. து. தெட்சணமூர்த்தி, நல்லை அமிழ்தன். பொருளாளர்கள், க. நவரட்ணம், ஆ. குமாரசிங்கம், உப தலைவர்: எஸ். கணேசசுந்தரம் ஒன்பது பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# 300 பேருக்கு 'கோட்டா'

கொழும்பு, வியாழன்

கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்திப்பகுதி 300 தொழிலதிபர்களுக்கு அவர்களது கைத்தொழிலுக்குத் தேவையானவற்றைப் பெறக்கூடிய லைசன்சுகளை வழங்கியுள்ளது.

# மற்றொரு பத்திரிகை மசோதா

கொழும்பு, வியாழன்

இலங்கையில் பத்திரிகை ஏகபோகத்தை முறியடிப்பதற்காக மற்றொரு பத்திரிகை மசோதாவைக் கொண்டுவருவதென மந்திரிசபை நேற்றிரவு முடிவுசெய்துள்ளது. பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'பத்திரிகை கூட்டுஸ்தாபன மசோதா' நிறைவேற்றப்பட்டதும் புதிய மசோதாவைச் சமர்ப்பிப்பதென மந்திரி சபை தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

# மிஸ் ஜின்னு

கராச்சி, அக். 23

பாகிஸ்தான் ஜனதிபதி தேர்தலில் போட்டியிடும் மிஸ் பாதிமா ஜின்னு நேற்று தனது தேர்தல் பிரசாரச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து கராச்சி திரும்பினுர்.

கிழக்குப் பாகிஸ்தானுக்கும், மேற்குப் பாகிஸ்தானுக்குமிடையேயிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு மத்திய அரசாங்கத்தை அவர் குற்றம் சாட்டினுர்.

# தாய்ச்சங்கத்திடம் கிளைச் சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்களமொழியில் தேர்ச்சி பெறுதவர்கள் பதவியிலிருந்து கட்டாயம் ஓய்வு பெறவேண்டுமென்ற நிபந்தனை 1965-ம் ஆண்டுவரை பின்போடப்பட்டிருந்தும், சிங்களம் தேர்ச்சி பெறுதவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படாமலிருப்பதை, யாழ்ப்பாணக் கிளை தபால் தந்தி அதிபர் சங்கக் காரியதரிசி தமது தாய்ச்சங்கப் பொதுக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

அரசாங்க சேவையிலுள்ள எங்கள் அங்கத்தவர்களுக்கு ஒருவித பாகுபாடுமின்றி பதவி உயர்வுசேவை மூப்பு, திறமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே கணிக்கப்படவேண்டும். 1963-ம் ஆண்டு தொடக்கம் தபால் அதிபர்கள் அடையாள சேவையிலிருந்த முதல்வகுப்பு வெற்றிடங்களை திறைசேரி நிதி நிலைமைகாரணமாக நிரப்பவிரும்பவில்லை. ஆனுல்பின்னர் முதலாம் வகுப்பிலான பதவி உயர்வை உத்தியோகத்தர்களுக்கு கொடுத்து இன்று சிங்களத்தில் தகமை காட்டும்படி அரசாங்கம் கேட்டுள்ளது.

அன்று நிதிநிலைமை சரியில்லையென்ற காரணத்தினுல் நிர்வாகம் பதவி உயர்வு கொடுக்காததற்காக உத்தியோகத்தர்களையா தண்டிக்க வேண்டும்? இக்காரணங்களினுல் நாங்கள் மிகவும் விரக்தியடைந்துள்ளோம். ஆகையால் இந்த விஷயத்தைபற்றி ஆராய்வதற்கு தபால் அதிபருடன் ஒரு நேர்முகப் பேச்சுவார்த்தை நடத்தி எங்கள் மேல் திணிக்கப்பட்ட நியாயமற்ற நிபந்தனையை உடனடியாக வாபஸ்பெற வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளவும்."

# ஐக்கிய சங்க பாடசாலை பரிசளிப்பு விழா

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் ஐக்கிய சங்க பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டி, பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள், ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்றது. போட்டி முடிவின்படி பச்சை இல்லம் 100 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், மஞ்சள் இல்லம் 79 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சிவப்பு இல்லம் 67 புள்ளிகளைப்பெற்று மூன்ரும் இடத்தையும், நீல இல்லம் 51 புள்ளிகளைப்பெற்று நாலாவது இடத்தையும் பெற்றது. பரிசளிப்பு விழா வட்டார வித்தியாதிகாரி திரு. எஸ். சபாபதி தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது அவர் பேசுகையில் இன்று எமது பாடசாலைகளில் தேகஆரோக்கியம், மனேவளர்ச்சி, ஆத்மீக வளர்ச்சி சம்பந்தமான பாடங்கள் முக்கியமாக கற்பிக்கப்படுகின்றதுஎன்றும் இவற்றில் எல்லாவற்றிலும் தேக வளர்ச்சியே முதன்மையாக விளங்குகின்றது என்றும் மாணவர்களிடையே ஒழுக்கம் குன்றுவது நீடிக்குமானுல், கல்வி கற்பிப்பதன் நோக்கமே மாறிப்போகும் என்று கூறினுர். பாடசாலை தலைமையாசிரியர் திரு. எஸ், மயில்வாகனம் உட்பட பலர் பேசினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. ச. கந்தசுவாமி ஜே. பி. பரிசில்களை வழங்கினுர்.

# ஸ்ரீமதி காந்தி கண்டனம்

பாரிஸ், அக். 23

சீனுவின் அணு குண்டு சோதனையை ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரெஞ்சு டெலிவிஷனில் பேசியபோது கண்டனம் செய்தார்.

# ஸ்கந்தா வெற்றி

சுன்னுகம், வியாழன்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1-வது பிரிவினருக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 1-வது பிரிவினர்க்குமிடையே யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தா கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றிபெற்றது.

போட்டி தொடங்கி இரண்டாவது நிமிடத்திலேயே ஸ்கந்தா கோஷ்டியின் வலது முன்னணி வீரர் ஆறுமுகம் தனது கோஷ்டிக்காக முதலாவது கோலைப் போட்டார். பின்பு இரு கோஷ்டிகளுக்குமிடையே பலத்த போட்டி காணப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரிப் பின்னணி வீரர்கள் எவ்வளவு திறமையாக விளையாடியும் ஸ்கந்தா நடுமுன்னணி வீரர் ராஜரத்தினத்தின் தந்திரமான விளையாட்டுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. இரண்டாவது கோலை ராஜரத்தினமே போட்டார்.

இடைவேளையின் பின்பு போட்டி தொடங்கியபோது யாழ்ப்பாணக்கல்லூரிக் கோஷ்டியினர் மிகுந்த உற்சாகமாகக் காணப்பட்டனர். எனினும் ஸ்கந்தா வீரர்களும் சளைக்காமல் விளையாடி எதிர்தரப்பினர் கோல்கள் எதுவும் போடாதபடி பார்த்துக்கொண்டனர். ஸ்கந்தாவைச் சேர்ந்த வீரர் பி. சண்முகநாதன் திறமையாகவும் நுணுக்கமாகவும் விளையாடினுர். போட்டி முடிவடையப் 15 நிமிடங்களிருக்கும்பொழுது ஸ்கந்தா கோஷ்டியினருக்கு ஒரு "பனுல்டி" சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. அந்தப் "பனுல்டி"யை ஸ்கந்தா முன்னணி வீரர் ராஜரத்தினம் வெகுலாவகமாக கோலினுள் அடித்து தனது கோஷ்டியின் கோல் எண்ணிக்கையை மூன்ருக உயர்த்தினுர். போட்டி முடிவடையும்வரை இரு தரப்பினரும் சளைக்காது நன்ருக விளையாடினர். யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டிக்கு ஒரு "பனுல்டி" சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் அதனை அவர்கள் பயன்படுத்தாதது அவர்களின் துரதிஷ்டமாகும்.

திரு. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

அதே நாளில் ஸ்கந்தா 2-ம் பிரிவுக் கோஷ்டியினருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி 2-ம் பிரிவுக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தா வீரர்கள் (3-0) கோல்களால் வெற்றிபெற்றனர். இம் 3 கோல்களுள் இரண்டினைச் சுப்பிரமணியமும் மற்ற ஒன்றை வடிவேலும் அடித்தனர்.

# கந்தரோடையில் தையல் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், சனி

கந்தரோடை தையல் கலை மன்றத்தினரின் தையல் பொருட்காட்சியை வருகிற திங்கட்கிழமை உடுவில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. தர்மலிங்கம் திறந்து வைப்பார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தில் நடைபெறவிருக்கும் இப்பொருட்காட்சியில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட உடைகள், உணவு வகைகள், பன்னவேலைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்; தொடர்ந்து இரண்டு நாட்களுக்குப் பொருட்காட்சி நடைபெறும்.

# சனசமூகநிலையக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

சோவியத் ரஷ்யாவை உதாரணமாக எடுத்து நோக்கினுல் அங்கு வாழும் மக்கள் தமது ஓய்வுநேரத்தை கல்வி, கலாச்சாரம், உடற்பயிற்சி போன்றவற்றிற்கே செலவிடுகிருர்களென்றும் இதே போன்றே நமது மக்களும் ஓய்வு நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு நல்ல சனசமூக நிலையங்கள் உதவி புரியுமென்றும் ஏழாலை மேற்கு ஜெயம் சனசமூகநிலையத்தில் திரு. ச. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. க. அருச்சுனன் பேசியபோது கூறினுர்.

திருவாளர்கள் க. கந்தையா க. சின்னத்துரை ஆகியோரும் பேசினர்.


3வது மாதம்!
ஸ்ரீ மனேகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
2-30, 6-30 காட்சிகள் மாத்திரம்
சம்பூர்ண மகாபாரதம்
10-15 a. m. & 9-45 p. m.
GHOST RIDERS FROM THE WEST

REGAL — JAFFNA
NOW SHOWING
Steve Reeves
IN
HERCULES
(ஹெர்குலீஸ்)
( Cinemascope - Color )

கடைசி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) மொடர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்

"நாங்கள் கிரேசன்ஸ் வேப்பர் கிரீம் உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து, எனது பிள்ளைகள் தடிமன் காரணமாக ஒரு நாளாவது பாடசாலைக்குப் போகத் தவறியதில்லை"
— திருமதி ஏ. எச்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிரேசன்ஸ் வேப்பர் கிரீமையே கேட்டுவாங்குங்கள்.
எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.

எந்நேரத்திலும் எப்பொழுதும் மகிழ்ச்சி ஊட்டும் பிராங்கோ சாக்கலேட்டுகளைச் சுவைக்கலாம்.
சுவிட்சர்லாந்தின் உயர்ந்த தரத்திற்கேற்ப தெரிவு செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பிராங்கோ சாக்கலேட்டுக்கள் இப்பொழுது காற்றுப்புகாதவண்ணம் அடைக்கப்பட்டு புதுமையுடனும் எழிலுடனும் மிளிருகிறது.
எனவே
எல்லோரும் இலங்கையில் சிறந்த பிராங்கோ சாக்கலேட்டுக்களை விரும்புகிறுர்கள் என்பதில் ஆச்சர்யம் எதுவுமில்லை
இன்றே
பிராங்கோ சாக்கலேட்டுகளை சுவைத்துப்பாருங்கள்;
இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய
பிராங்கோ சாக்கலேட்டுக்களைச் சுவையுங்கள்.
ஈ. பிரான்சிஸ் பெரரா அன் கோ.,
10-12, யரின்நுவர வீதியா, கண்டி. தொலைபேசி: கண்டி 5,9,0
கொழும்பு காரியாலயம்: 234, மெசன்சர் தெரு, கொழும்பு-12 தொலைபேசி: 7565

# உலக ஹாக்கி சாம்பியன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடைவேளைக்குப் பின் 6வது நிமிஷத்தில் பாகிஸ்தான் ஆட்டக்காரர் ஒருவர் பந்தைக் காலால் தடுத்து நிறுத்தியதால் இந்தியாவுக்குப் பெனல்டி கிடைத்ததைத் தொடர்ந்து, மொஹிந்தர்லால் வேகமாகப் பந்தை அடித்து ஒரு கோல் போட்டார்.

பாகிஸ்தான் அடித்த இரு "லோங் கோர்னரை" இந்தியக் கோல்கீப்பர் லக்ஷ்மண் திறமையாகத் தடுத்துநிறுத்தினார்.

ஆட்டத்தின் கடைசி நேரம் வரை பாகிஸ்தான் கோல் போட எவ்வளவோ முயற்சி செய்தும் அது தோல்வியே கண்டது.

இந்தப்போட்டிடோக்கியோ ஒலிம்பிக்கில் 1-ம் இலக்க மைதானத்தில் நடைபெற்றது.

இந்தியா தங்க மெடலைப் பெற்ற செய்திகேட்டு ஜனாதிபதி ராதா கிருஷ்ணன் கப்டன் சரஞ்சித்லால் தலைமையிலான இந்திய ஹாக்கி கோஷ்டிக்கு பாராட்டு தெரிவித்தார்.

உதவி ஜனாதிபதி டாக்டர் சகிர் ஹூஸெய்னும் இந்திய வீரர்களுக்குப் பாராட்டு தெரிவித்தார்.

உத்தர பிரதேசத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த பிரதமர் சாஸ்திரிக்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டதும், அவர் அதை கூட்டத்தினருக்கு வெளியிட்டபோது ஆயிரக்கணக்கானோர் கரகோஷம் செய்தனர்.

இந்தியக் கோஷ்டி வெற்றி பெற்றதைக் கேட்டவுடன், ஒலிம்பிக் அரங்கில் நூற்றுக்கணக்கானோர் இந்தியகோஷ்டிக்கு பாராட்டு தெரிவித்தனர். 4 ஆண்டுகளுக்கு முன் ரோமில் தனது உலக சாம்பியன்பட்டத்தைஇந்தியாபாகிஸ்தானுக்குப் பறிகொடுத்தது. ஆனால் ஒலிம்பிக்கில் எவராலும் தோற்கடிக்க முடியாத மிகக்கடினமான பாகிஸ்தான் கோஷ்டியைமிகத்திறமையுடன் விளையாடிய இந்தியா தோற்கடித்தது.

1929-ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஹாக்கியில் உலக சாம்பியன் பட்டத்தை பெற்றது. ரூப்சந், தயாசந்த ஆகிய ஹாக்கி மன்னர்கள் அப்போது இந்தியக் கோஷ்டியில் இருந்தனர். அது முதல் ஐந்து ஒலிம்பிக்களில் இந்தியாவே தொடர்ந்து சாம்பியன் பட்டத்தை அடைந்து வந்தது.

# 8 தடவை சந்திப்பர்

புதுடில்லி, அக் 23

இந்தியப் பிரதமர் சாஸ்திரியும், இலங்கைப் பிரதமர் சிறிமாவும் 8 தடவைகள் சந்தித்து இலங்கை - இந்தியர் பற்றிப் பேசுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

# கைத்தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 500 ரூபா பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 05 Y 0847 | 08 H 0413 | 15 Q 0104 |
| 02 L 0559 | 15 T 0403 | 07 A 0480 |
| 18 X 0070 | 18 B 0334 | 03 P 0154 |
| 01 M 0485 | 18 D 0794 | 02 Y 0062 |
| 03 C 0345 | 14 S 0840 | 02 X 0?78 |
| 07 N 0230 | 11 D 0464 | 11 J 0723 |
| 14 I 0108 | 11 W 0528 | 13 V 0115 |
| 17 L 0599 | 10 E 0397 | 07 M 0777 |
| 03 L 0384 | 09 J 0884 | 03 D 0317 |
| 13 K 0952 | 02 X 0534 | 05 S 0474 |
| 02 C 0110 | 02 U 0955 | 09 B 0468 |
| 09 V 0085 | 10 A 0438 | 05 F 0379 |
| 13 D 0965 | 17 T 0119 | 05 E 0188 |
| 09 I 0073 | 15 U 0392 | 17 Y 0517 |
| 10 A 0838 | 08 U 0133 | 10 M 0869 |
| 19 Q 0157 | 18 R 0995 | 08 X 0412 |
| 07 S 0164 | 09 Q 0377 | 08 R 0937 |
| 10 P 0561 | 17 K 0125 | 03 T 0460 |
| 01 S 0892 | 15 T 0551 | 19 U 0222 |
| 13 T 0483 | 14 G 0090 | 17 L 0353 |
| 03 F 0007 | 04 A 0203 | 07 J 0773 |
| 05 N 0252 | 11 L 0656 | 17 Y 0201 |
| 10 K 0732 | 14 A 0750 | 12 T 0770 |
| 02 F 0391 | 17 B 0376 | 17 W 0629 |
| 02 B 0215 | 11 S 0729 | 15 E 0729 |
| 15 K 0560 | 03 P 0782 | 14 F 0992 |
| 05 H 0412 | 14 U 0965 | 07 Y 0804 |
| 07 E 0124 | 01 P 0250 | 06 H 0812 |
| 12 I 0033 | 09 L 0885 | 05 G 0562 |
| 07 Q 0612 | 03 F 0236 | 02 M 0841 |
| 09 F 0888 | 05 I 0366 | 09 F 0992 |
| 15 C 0015 | 15 N 0363 | 13 V 0907 |
| 17 Y 0282 | 13 V 0820 | 16 D 0742 |
| | 08 J 0477 | |

தலா ரூபா 250 பெறும் 24 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 16 A 0074 | 16 B 0074 | 16 C 0074 |
| 16 D 0074 | 16 E 0074 | 16 F 0074 |
| 16 G 0074 | 16 H 0074 | 16 I 0074 |
| 16 J 0074 | 16 K 0074 | 16 L 0074 |
| 16 M 0074 | 16 N 0074 | 16 P 0074 |
| 16 Q 0074 | 16 R 0074 | 16 S 0074 |
| 16 T 0074 | 16 U 0074 | 16 V 0074 |
| 16 W 0074 | 16 X 0074 | 16 Y 0074 |

# ஹோமிபாபா

புதுடில்லி, அக். 23

இந்திய அணுசக்திக்கமிஷன் தலைவர் டாக்டர் எச் ஜே. பாபா நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்தார். உலக நாடுகளின் அணுசக்தி விபரங்கள் பற்றி அவர் பிரதமருக்கு விளக்கியதாகத் தெரிகிறது.

# ஐ. நா. இல்லாத...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனம் இல்லாத ஒரு உலகம் நீண்ட காலத்துக்கு நீடிக்காது என்பதையும் ஐ. நா. இல்லாத உலகம் சாத்தியமாகாது என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

ஐக்கிய நாடுகளின் சாதனைகளே அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும். அரசியல் துறையில் ஐ. நா. நிலைநாட்டியுள்ள சாதனை போற்றத்தக்கது. சர்வதேச நெருக்கடி தோன்றியபொழுது ஐ. நா. எவ்விதமாக அந்த நெருக்கடியைத் தீர்த்துவைத்தது என்பதை பலரும் அறிவர். உலகின் நெருக்கடி நிலவும் பகுதிகளில், ஐக்கிய நாடுகள் சமாதானப் படைகளும், ஐக்கிய நாடுகள் பார்வையாளர்களும் சேவையாற்றுகின்றனர். இவையெல்லாம் உலகின் நிரந்தர சமாதானத்துக்குத் தேவைப் படுபவைகளே.

அணு ஆயுதப் போர் மூலம் உலகம் அழிந்துவிடமுடியும். ஆனால் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதன் மூலம் இந்தப் பேரபாயத்தைத் தடுக்க முடியும். ஆனாலும் வேறு சில முக்கியபிரச்னைகளும் எம்மிடையே நிலவுகின்றன. வறுமை, பட்டினி, அறியாமை,நோய், அநீதி ஆகியவற்றிலிருந்து உலகைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இப்பொழுது அவசியமாகின்றது. எம்மைப் பாரதூரமாகபாதிக்கும் மேற்கூறியவைகளை வேருடன் அழித்து, எல்லோரும் சந்தோஷமாக, சுகமாகவாழக்கூடிய உலகினைச் சிருஷ்டிக்க நாம் முன்வர வேண்டும்.

பொருளாதாரத் துறையிலும் சமூக முன்னேற்றத்திலும் பின்தங்கியிருக்கும் நாடுகளை அபிவிருத்தி செய்வதில் மற்றைய நாடுகள் முழு முயற்சி மேற்கொள்ளவேண்டும். வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமாக கடந்த வருடத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மகாநாடு இத்துறையில் முக்கிய பங்கை எடுத்துக்கொண்டது. அணு சக்தியை ஆக்கத்துறைகளுக்குப் பயன்படுத்துவது சம்பந்தமான மூன்றாவது சர்வதேச மகாநாடு ஒன்றும் இவ்வருடத்தில் நடைபெற்றது. இந்த மகாநாடும் பின்தங்கிய பல நாடுகளின் அபிவிருத்திக்கு உதவிகளை அளிக்க முன்வந்துள்ளது.

அடிப்படை மனித உரிமைகளில் நம்பிக்கைவைப்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் அளிப்பது போன்றவற்றை ஐக்கிய நாடுகள் சாஸனம் மீண்டும் வலியுறுத்துகிறது. சகலவிதமான சமூக பாரபட்சங்களையும் களைந்தெறிவதென்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபன உறுப்பு நாடுகள் எடுத்துக்கொண்ட முடிவு நல்ல பலனைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

எம்மை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளையும் தீர்த்து வைக்க நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் பாடுபடுவோம். 'சர்வதேச கூட்டுறவு வருடத்தை' விரைவில் கொண்டாடவிருக்கும் நாம், சமாதானத்தில் நம்பிக்கைவைத்து கூட்டுறவுடன் ஒத்துழைத்து எம்மை எதிர்நோக்கும் நெருக்கடிகளை வெல்லவேண்டும் இதற்கு ஒவ்வொரு துறையிலும் சக ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

# தாழ்த்தப்பட்ட மாணவர் புகார்

## கல்லூரி அதிபர் மறுப்பு

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் அரசினர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையில், தாழ்த்தப்பட்ட சில மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டதாகத் தெரிவித்து அப்பாடசாலையைச் சேர்ந்த சில சிறுபான்மைத் தமிழ் மாணவர்கள், கல்வி அமைச்சருக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

இது விஷயமாக அக்கல்லூரி அதிபர் தெரிவிக்கையில் அப்படியான பாரபட்சம் சிறிதளவும் காட்டப்படவில்லையென்றும் எல்லோரும் சமமாகவே நடத்தப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# பண்டித வகுப்புகள்

[illegible]வாஞ்சிக்குடி, வெள்ளி

கிழக்கிலங்கை பண்டிதர் கழகத்தினால் பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் பண்டிதர் வகுப்பொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. விஜய தசமியன்று தொடக்கப்பட்ட இவ்வகுப்பை புல்வர்மணி திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் பூபாலபிள்ளை, வித்துவான் ஜெயரத்தினம் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர். மட்டக்களப்பு, அக்கரைப்பற்றுப் பகுதிகளிலும் பண்டித வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிய வருகிறது.

# ஐயாறன்

2-ம் பக்கத் தொடர்ச்சி)

யென்றும், கமிஷன் விசாரணை மூலம்தான் உண்மைக் காரணத்தை அறிய முடியுமென்றார்.

நாங்கள் வந்த ரயிலுக்கும் ஏதாவது விபத்து ஏற்படுமோ என்று மனதில் திகில்தான். கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டே இரண்டு மணி தாமதமாக, உயிருடனே கொழும்பு வந்து சேர்ந்தோம்.

* * *

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குடும்பத்தார், திருக்கேதீச்சரம்வந்து பின்னர் மடுமாதா கோவிலுக்கும் சென்று தரிசித்து, எங்களுடன் ரயிலேறினர். முதல் நாள் அங்கே, மடு யாத்திரீகர் சென்ற ஒரு பஸ் மரத்தில் மோதி பலர் காயம் பட்டதைப்பற்றிச் சொன்னார்கள். அந்த பஸ் மரத்தில் மோதாதிருப்பின், அவர்கள் விபத்து ஏற்பட்ட ரயிலில் பிரயாணம் செய்திருப்பரென்றும், நல்ல வேளையாக ரயில் விபத்திலிருந்து தப்பிவிட்டதாகவும் தெரிவித்தனர். ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் தமிழரே அதிகமென்று தெரிகிறது. இதில் மடுவிலிருந்து திரும்பிய சில யாத்திரீகர்களுமிருந்தனர். சட்டவிரோத குடியேற்றக்காரர் என்று சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்ட 13 பேர்களில் 4 பேர் இவ்விபத்தில் மாண்டனர். காயம்பட்ட 9 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். அவர்களுக்குக் காவலாக சென்ற பொலிஸ்காரரும்,வேறு உலகம் சென்றுவிட்டார்!

இவ்வளவு ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பி நாம் இன்னும் உயிர் வாழ்ந்துவருவது ஆச்சரியமேயல்லவா?

* * *

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால், இல்லத்தார் செய்யலாவதென் ஏழைகாள், நல்லத்தான் நமையாளுடையான் கழல், சொல்லத்தான் வல்லிரேல்துயர் தீருமே.

— திருநாவுக்கரசர்

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்துமுடிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் பருத்தித்துறைநகரசபைத்தலைவர் அவர்களால் கோரப்படுகின்றன.

தம்பசெட்டி கோணந்தீவு வீதி திருத்துதல், றெயினேச்சலில் வீதி திருத்துதல், ஓடக்கரை வீதி திருத்துதல், ஐயனார் கலட்டி ஒழுங்கை திருத்துதல், செட்டித்தெரு ஒழுங்கைகள் (3-ம் 7-ம் வட்டாரம்) திருத்துதல், என். எம். ஒழுங்கை திருத்துதல், சவக்காலை ஒழுங்கை திருத்துதல், தட்டாரதெரு வீதி திருத்துதல், நெல்லண்டைவீதி திருத்துதல், வண்ணா ஒழுங்கை திருத்துதல், கந்தசாமிவைத்தியர் ஒழுங்கை திருத்துதல், அரசடி ஒழுங்கை மதவு சுவர் கட்டுதல், ஈசுரபாதம் ஒழுங்கை மதவு சுவர் கட்டுதல், கந்தசாமி வைத்தியர் ஒழுங்கை மதவுசுவர் கட்டுதல், சந்தா தோட்ட ஒழுங்கை திருத்துதல், முதலி கோவில் ஒழுங்கை திருத்துதல், யாலப்பை ஒழுங்கை திருத்துதல், சவணாய் ஒழுங்கைதிருத்துதல், மின்சார நிலையக் கட்டிடநிலையம் திருத்துதல்.

(2) கேள்வி விண்ணப்பங்கள் 4-11-64 பிற்பகல் 2 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பப் பிரதிகள் 2-11-64 பிற்பகல் 2 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பெறுபவர் ரூபா 25-00 பிணைப்பணமும் ரூபா 5-00 பிரவேசப்பணமும் செலுத்த வேண்டும்.

(4) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்கவேண்டும். அங்ஙனம்தவறுபவரின் பிணைப் பணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

(5) மேற்படி வேலைகளின் முழுவிபரங்களை அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வே. நாகநாதன்,
தலைவருக்காக,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை.
21-10-64. 960

# யாழ். இந்துமகளிர் கல்லூரி பிரவேசப் பரீட்சை 1965

1. 6-ம் வகுப்பிற்கான பிரவேசப்பரீட்சை 7-11-64 சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

2. 7-ம், 8-ம் G. C. E. Prep (Ordinary Level) வகுப்புகளுக்கான பரீட்சை 14-11-64 சனிக்கிழமை மு. ப. 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 30-10-64.

5. 6, 7, 8, Prep G. C. E. (Ordinary Leval) & Prep G. C. E. (Ad. Level) வகுப்புகளில் மாத்திரம் இடமுண்டு.

அதிபர்


## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னாண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

## தேவை

அலுமினியப் பாத்திரம் தயாரிக்கக்கூடிய திறமை வாய்ந்தவர் தேவை. எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1041

## "இன்பம்"

"ஆசிரியர்: இனியவன்"

ஈழத்து எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், உளநூல் ஆராய்ச்சி, வைத்தியம், கைரேகை சாஸ்திரம் மற்றும் தெய்வீக சினிமா அத்தனை அம்சங்களுடனும் அதிவிரைவில் வெளிவருகிறது. விடயதானங்களை 25-11-64க்கு முன் அனுப்பி வைக்கவும். ஆசிரியர், இன்பம், மே/பா. இனியவன், காவலடிக் கேணி, காரைநகர்-(ஈழம்) 1047

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினர் நடத்தும் குடும்பத் திட்ட கொண்டாட்டம் நவம்பர் மாதம் 11ந் திகதி ஆரம்பமாகி 22ந் திகதி முடிவடையும்.


## வேலைவாய்ப்பு

லிகிதர், காசியர், டைப்பிஸ்ட், ஸ்ரோர்ஸ் - கீப்பர், எலக்திசன்ஸ் முதலிய பதவிகட்கு விண்ணப்பங்கள் S. S C. or G. C. E. or J. S. C. சித்தியடைந்தோரிடமிருந்து கோரப்படுகிறது. விபரங்கட்கும் விண்ணப்பப் பத்திரங்கட்கும் 1 ரூபா P. O. விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கலாசாலை, 230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 959

## விஜயலெட்சுமி

ஆபரண மாளிகை

ஆஸ்பத்திரி வீதி, — வல்வெட்டித்துறை.



சிறந்த நகை உற்பத்தியாளர்களால் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த தங்கப் பவுண் வைர நகைகளை

தற்காலத்திற்கேற்ற டிசைன்களில் தயார் செய்து உங்களை திருப்தி செய்யக் காத்திருக்கிறோம்.

எமது ஆபரண மாளிகைக்கு ஒரு முறை விஜயஞ்செய்யுங்கள்.

# உலக ஹாக்கி சாம்பியன் பட்டத்துக்கு மீண்டும் இந்தியா

## பாகிஸ்தானை ஒரு கோலால் தோற்கடித்து தங்கமெடல் பெற்றது

டோக்கியோ, அக். 23

இன்று டோக்கியோவில் நடைபெற்ற உலக சாம்பியன் பட்டத்துக்கான இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தானை ஒரு கோல் போட்டுத் தோற்கடித்துத் தங்க மெடலைப் பெற்றது. பாகிஸ்தான் ஒரு கோலும் போடவில்லை.

இன்று காலை டோக்கியோவில் பெருமளவு மழை காரணமாக 10 மணிக்கு ஆரம்பிக்க இருந்த ஹாக்கி ஆட்டம் 10-49 க்குத்தான் ஆரம்பமானது. 70 நிமிஷம் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

ஆட்ட ஆரம்பத்தில் பாகிஸ்தான் தரப்பில் கடுமையான தாக்குதலும், வேகமும் அதிகரித்திருந்தது.

எனினும் இந்தியா திறமையுடன் விளையாடியதால் எந்தக் கோஷ்டியும் கோல்போடவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

# விரும்பும் இந்தியரை பாரதம் ஏற்கும்

# புதுடில்லி வட்டாரங்களில் வெளியாகும் நம்பிக்கை

## இன்று சிறிமா-சாஸ்திரி பேச்சு

புதுடில்லி, அக். 23

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரியும் நாளை சனிக்கிழமை சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இலங்கை-இந்திய அதிகாரிகளுக்கிடையில் ஆலோசனை தொடர்ந்து நடைபெறுகிறது. இரு பிரதமர்களுக்கிடையிலும் இன்று ஆரம்பமாகும் முறையான பேச்சுவார்த்தைகள் நான்கு கட்டங்களாகத் தொடர்ந்து நடைபெறும்:

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்புபவர்களனைவரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள சம்மதிக்குமென்றும் ஆனால் இந்தியா செல்லுமாறு இலங்கை அரசாங்கம் எவ்வித நிர்ப்பந்தமோ, தூண்டுதலோ அளிக்கக்கூடாதென்றும் இந்திய அரசாங்கம் இப்பேச்சுவார்த்தைகளில் தெரிவிக்குமென்று அறியப்படுகிறது.

# புதிய இணைப்பு பிராமணசங்கம்

## சைவசமயத்தை வளர்க்க பத்திரிகை வெளியிட முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை சைவசமயக் குருமார் சபை, பிராமண சமூகசேவா சங்கம் ஆகிய இரு சங்கங்களையும் இணைத்து ஒரே ஸ்தாபனமாக்கி நடத்துவதற்கான விசேஷ மகாசபைக் கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு இலங்கைச் சர்வகலாசாலை சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்ஸ்ரீ கா கைலாசநாதக் குருக்கள் தலைமை வகித்தார்.

இரண்டு சங்கங்களையும் இணைத்து "அகில பிராமண குரு சமூக சேவா சங்கம்" என்ற பெயருடன் ஒரே சங்கமாக நடத்துவதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்கத்தின் சார்பில் சைவசமயம், வேதம் ஆகமம், புராண இதிகாசங்கள் ஆகியவற்றில் அறிவை பொதுவாகச் சைவாபிமானிகளிடமும் பிராமணர்களிடமும் மேலோங்கச் செய்வதற்கான சங்க வெளியீடாக ஒரு பத்திரிகை நடத்துவதற்கும் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. புதிய இணைப்பு சங்க உத்தியோகஸ்தர்கள் வருமாறு:

போஷகர்கள்: பிரமஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள், பிரமஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள், பிரமஸ்ரீ இ. கு. பூர்ணவக்தேஸ்வரக் குருக்கள், பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள். தலைவர்: பிரமஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள். உபதலைவர்கள்: பிரமஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள், க. வை. ஆத்மநாதசர்மா, ப. தியாகராச சர்மா, ச. ஸ்ரீனிவாசன். பொதுக்காரியதரிசி: ப. வித்தியானந்த சர்மா. உதவிக் காரியதரிசி: க. ஷடாட்சர சர்மா. வித்தியா காரியதரிசி: பிரமஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள், பிரசாரக் காரியதரிசி: க. சாம்பசிவக் குருக்கள். பிரசுரக் காரியதரிசி: சோ. சிவசுப்பிரமணிய ஐயர், அபிவிருத்திக் காரியதரிசி: ப. குத்துக்குமாரசாமி சர்மா, தனாதிகாரி: ச. வைத்தீஸ்வர சர்மா. உதவித் தனாதிகாரி: கா. கு. சிவசுப்பிரமணியக் குருக்கள். நிருவாகசபை அங்கத்தவர்கள்: தி. ச. தியாகராச ஐயர், க. சிவசுப்பிரமணிய ஐயர், ச. பஞ்சாட்சர சர்மா, ச. முத்துக்குமாரசாமிக் குருக்கள், க. கணேசக் குருக்கள், பி. பஞ்சாட்சரக் குருக்கள், கு. இராமநாதக் குருக்கள், தி. நடனசபாபதி சர்மா. கணக்குப் பரிசோதகர்: ஐ. முத்துக்குமாரசாமி ஐயர்.

## டயஸின் நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

பாதுகாப்ப வெளி விவகார அமைச்சின் சில நிர்வாகவிஷயங்களில் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ், அரசாங்க உதவித் தலைவர் திரு. சி. பீ. டி' சில்வாவைப் புறக்கணித்து நடவடிக்கைகள் மேற்கொண்டது சம்பந்தமாக அரசாங்கப் பார்லிமெண்டரிக்குழுவின் அங்கத்தவர்கள் போர்க்கோலம் கொண்டுள்ளார்கள்.

திரு. சி. பி டி' சில்வாவைக் கலந்தாலோசியாது திரு டயஸ் வெள்ளரசு மரக் கன்றை ரோயல் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த விசேஷ விமானத்தில் இந்தியாவுக்கு எடுத்துச் சென்றது சம்பந்தமாகவே மேற்படி அங்கத்தவர்கள் ஆத்திரம் கொண்டுள்ளார்கள். இதுசம்பந்தமாக பிரதமர் முழு விசாரணை நடத்தவேண்டுமென இந்த அங்கத்தவர்கள் கருத்து கொண்டுள்ளார்கள்.

## நம்பிக்கையில்லை

புதுடில்லி, அக். 23

ராஜஸ்தானின் சுக்காடியா மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஒன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. விவாதத்திற்கான திகதி பின்பு குறிப்பிடப்படும்.

## பேர்லினில் கிளர்ச்சி

லண்டன், அக். 23

சோவியத் தலைமைப் பதவியிலிருந்து திரு. குருஷ்சேவ் நீக்கப்பட்டதன் விளைவாக கிழக்கு பெர்லினில் ஆர்ப்பாட்டமும் கிளர்ச்சியும் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

## யு. என். பி.யின் எதிர்ப்பு பிரசாரம்

கொழும்பு, வெள்ளி

பத்திரிகைகளை எடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக நாடு பூராவும் தொடர்ச்சியான எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த யு. என். பி. ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

யு. என். பி. கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா இக்கூட்டங்களிலெல்லாம் பேசுவாரென எதிர்பார்க்கப்படுகிறது

## "தமிழ்நாடுமந்திரிசபை மீது நம்பிக்கையில்லை"

### நாளை வரை விவாதம்

சென்னை, அக். 23

தமிழ் நாட்டு மந்திரிசபை மீது தி. மு. க. அங்கத்தினர் மதியழகன் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் இப்போது கீழ் சபையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கம்யூனிஸ்ட் அங்கத்தவர் திரு கல்யாணசுந்தரமும் மற்றோர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார். 3 நாள் விவாதம் நாளை சனிக்கிழமை முடிவடையும் அன்றையதினம் முதல் மந்திரி பக்தவத்சலம் விவாதத்துக்குப் பதிலளிப்பார்.

## சீனாவின் அணு குண்டு சக்தி

வாஷிங்டன், அக். 23

சீனா மற்றோர் நாட்டின் மீது அணு குண்டை வீசும் சக்தியைப்பெற இன்னும் பல வருடங்கள் பிடிக்கும் என அமெரிக்கபாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கூறினார்.

ராஜாங்க இலாகா இன்று விடுத்துள்ள ஒரு அறிக்கையில் அமெரிக்க உதவியின் மூலம் இந்தோனேஷியாவில் அமைக்கப்பட்டிருக்கும் அணு சக்தி நிலையம் ஆயுத உற்பத்திக்குப்போதுமானதல்ல எனக் குறிப்பிட்டார்.

நேற்று அமெரிக்கா 2 கட்ட 1200 மைல் ராக்கெட் ஒன்றை வெற்றி கரமாகப்பரீட்சை செய்தது இதன் நிறை ஐந்தரை டன்கள்.

## தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 19-ம் வருடாந்தக் கூட்டம் இன்று காலை 9-30 மணிக்கு கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. இந்தக் கூட்டத்தில் தலைவர் முன்னுரையையடுத்து திரு. வி. டி. ஐ. சிறிசேன, பேராசிரியர் திரு. ப. சந்திரசேகரம், பேராசிரியர் திரு. கு. நேசையா முதலியோரின் சொற்பொழிவுகள் இடம் பெறும். மாலை நிகழ்ச்சிகளில் பிரேரணைகள் ஆராய்தலும் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெறும்.

## பிரிட்டிஷ் கயானா

லண்டன், அக். 23

பிரிட்டிஷ் கயானாவில் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு இங்கு விஜயம் செய்துள்ள அந்த நாட்டுப் பிரதமர் திரு. செட்டிஜகன் பிரிட்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## இலக்கிய விழா

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியகலாசாலைமண்டபத்தில் இன்றும் நாளையும் இலக்கிய விழா வலிகாமம் கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஆதரவில் நடைபெறும். சனிக்கிழமை நிகழ்ச்சிகள் காலை பத்து மணிக்கும், ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள் மாலை ஐந்து மணிக்கும் ஆரம்பமாகின்றன. உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யு. டி. விமலநாதந்தில இவ்விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

## பாலம் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை

களுவாஞ்சிக்குடி, வெள்ளி

மண்முனைத்துறைக்கு ஒரு பாலம் அமைக்கவேண்டும் என்று பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பல வருடங்களாக அரசாங்கத்தை வேண்டிவந்ததின் பயனாக இப்பொழுது பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக மராமத்து இலாகா டைரக்டர்மட்டக்களப்புப்பகுதி என்ஜினியரை வேண்டிய தகவல்களைத்தயாரித்து அனுப்பும்படி கேட்டுள்ளார். இப்பாலம் பட்டிருப்புத் தொகுதியையும் மட்டக்களப்புத் தொகுதியையும் இணைக்கிறது. மட்டக்களப்புப்பகுதியிலுள்ள தலைசிறந்த புராதன ஆலயமாகிய கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குச்செல்லவும் தினமும் ஆயிரக்கணக்கான விவசாயிகளும் பிரயாணிகளும் இவ்வழியாகப் பிரயாணம் செய்யவும் இப்பாலம் மிகுந்த துணைபுரிகிறது. மட்டக்களப்பு முதலாம் எம். பி, திரு. செ. இராசதுரை, இரண்டாவது எம். பி. ஜனாப் மாக்கான் மாக்கார் ஆகியோரும் இது விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துவருவதாக அறியவருகிறது.

## பாகிஸ்தானுக்கு துருக்கி ஆதரவு

கராச்சி, அக். 23

காஷ்மீர் பிரச்னையை நியாயமாகவும் கௌரவமாகவும் தீர்ப்பதற்கு பாகிஸ்தானின் கோரிக்கையை தன்நாடு முற்றிலும் ஆதரிப்பதாக துருக்கி அயல்நாட்டு மந்திரி மீண்டும் வலியுறுத்தினார். பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள அவர் அயல்நாட்டு மந்திரி பூட்டோவைச் சந்தித்தார். துருக்கியும், பாகிஸ்தானும் முறிக்க முடியாத நட்புறவு, சகோதரத்துவத்தில் பிணைக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார். சைப்பிரஸிலுள்ள துருக்கியர் விஷயத்தில் பாகிஸ்தான் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

## தீப்பிடித்து வீடு எரிந்தது

காங்கேசன் துறை, வெள்ளி

மயிலிட்டியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளைக்குச் சொந்தமான ஒரு வீடு நேற்றுக் காலை தீப்பிடித்து எரிந்தது. சம்பவம் நடைபெற்றபொழுது சங்கரப்பிள்ளையின் மனைவி குசினியில் சமைத்துக் கொண்டிருந்ததாகவும் அவர்களின் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. தீ பிடித்ததைக்கண்ட சங்கரப்பிள்ளை மனைவி கூக்குரலிடவே அவ்வழியாக்சென்றுகொண்டிருந்த காங்கேசன் துறை பொலிசைச் சேர்ந்த இரு பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்க உதவினார்களெனத் தெரிய வருகிறது தீப்பிடித்ததற்குக் காரணம் என்னவென்பதுதெரியவில்லை. பொலிசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்றுவரும் யோகோவாவின் சாட்சிகள் மகாநாட்டில் இன்று, யோகோவாவின் சாட்சிகள் இலங்கைக் கிளை மேற்பார்வையாளர் திரு. வி ஏ. தரஹா "நல்மனமுள்ள மனிதர்களின் மத்தியில் சமாதானமா? அல்லது ஆர்மகெதோனா" என்னும் பொருள் பற்றி சிறப்பு சொற்பொழிவாற்றுவார்.

## சீனாவுக்கு அங்கத்துவம்

நியுயோர்க், அக். 23

அடுத்த ஐ. நா. பொதுச்சபை கூட்ட நிகழ்ச்சி நிரலில் "சீனாவுக்கு அங்கத்துவம்" பற்றிய பிரச்னை சேர்க்கப்படவேண்டும் என கம்போடியா கோரியிருக்கிறது.

## அதிக உயரம்

மாஸ்கோ, அக். 23

சமீபத்தில் விண்வெளியில் உலகவலம் வந்த சோவியத் யூனியனின் மூவர் கிரகம் இதுவரை மனிதன் சென்றிராத அளவில் 254 மைல் உயரத்துக்குச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஏலவிற்பனை ஒத்திவைப்பு

இன்று பத்தமேனியில் ஏலவிற்பனைக்குப் போடப்பட்ட ஏழு காணிகளும் 31-ம் திகதி சனிக்கிழமை காலைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செ. விசாகரத்தினம்,
1048 வெந்தீஸ் மேஸ்தர்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: